நினைவு மலர் 2

# கர்மவீரன் - கணபதி



[வாழ்க்கைச் சித்திரம்]

விலை அணா 3.



N. R. Padmanabhan.

நினைவு மலர் 2



# கர்மவீரன் - கணபதி

[வாழ்க்கைச் சித்திரம்]

★

ஆசிரியர்
N. R. பத்மநாபன்,
காரைக்குடி.

## முன்னுரை

தோழர் N. S. கணபதியை தமிழ் நாட்டில் அறியாதவர் எவரும் இருக்கமாட்டார்கள். அன்னார் தேசமக்களுக்கு ஆற்றிய தொண்டு கொஞ்சமல்ல. அரசியல் துறையில் அனுபவித்த துன்பங்களும் சிறைவாசமும், அவர் வயதளவுக்கு மீறியனவென்று கூறினல் மிகையாகாது. சமூகத்துறையில் மக்களது வறுமை - அறியாமை - மூடப்பழக்கவழக்கம். இவைகளால் ஏற்படும் துன்பங்களை புரட்சிகரமாக ஒழிக்க முற்பட்டது மறக்கமுடியாதவைகளாகும். ஏழைப் பாட்டாளிகளின் துணைவனுகவாழ்ந்து, அதன் காரணமாகவே உயிரையும் நீத்த இவ் வீரனின் வாழ்க்கைச் சித்திரம் ஒவ்வொருவர் மனதிலும் பதிந்திருக்க வேண்டுவது அவசியமன்றோ! 12 ஆண்டுகள் நெருங்கிய தோழமை கொண்ட இந்த கர்மவீரனது வாழ்க்கையை எல்லோரும் அறிந்துகொள்ளுமாறு செய்யாவிடின் எனது கடமையினின்றும் தவறியவனுவேன்.

ஆதலின் என்னுலியன்றவரை இந்த வாழ்க்கைச் சித்திரத்தை ஒருவாறு தொகுத்

திருக்கிறேன். இன்னும் பல முக்கிய நிகழ்ச்சிகள் விடுபட்டிருக்கின்றன. மிக அவசரஅவசரமாக எழுத நேர்ந்தமையே காரணம். ஆதலின் அடுத்த பதிப்பில் அவைகளைச்சேர்த்துவிடத்தவறமாட்டேன்; அதற்காக மன்னிப்பு வேண்டுகிறேன்.

அவர் நம்மைப்பிரிந்து இன்றோடு ஓராண்டு நிறைவுபெறுகிறது. இந்தச்சந்தர்ப்பத்தில் அவரது ஞாபகார்த்தமாகக் கொண்டாடப்படும் இக் கூட்டத்தில், இந்தச் சித்திரத்தை சமர்ப்பிக்கிறேன். வீரனின் வாழ்க்கைச் சித்திரம் வீடுதோறும் விளங்க வேண்டுமென்பது எனது ஆசை. நடமாடும் தெய்வங்கள் துணைபுரிக!

காரைக்குடி,
19—6—41.

N. R. பத்மநாபன்,
ஆசிரியர்.

வந்தேமாதரம்

# கர்மவீரன்-கணபதி

☆

## பிறப்பும் வளர்ப்பும்

பண்டைக்கால முதல் தமிழ் நாட்டின் பெருமைக்கு இலக்காக விளங்குவது மதுரை மாநகர். இந்நகரின் ஊடே நிலங்கிழித்துச் செல்லும் வைகைத் திருநதியின் வடகரையில், நாற்புறமும் நீரால் சூழப் பெற்ற சிற்றூர் ஒன்றுண்டு. செல்லூர் என்பது அதன் பெயர். அங்கு ஒரு சில பத்து ஆண்டுகளுக்கு முன்னர், தேசப்பணியில் உடல், பொருள், ஆவி நீத்து வான்புகழ் கொண்ட தூத்துக்குடி ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள், தன் தோழர்களுடன் அடிக்கடி வந்து தங்குவதுண்டு. பெரியார் ஓய்வுக்குக் காத்திருந்த அந்த இல்லம் எதுவாக இருக்கும்! வந்தேமாதர மந்திரமாகத்தானே இருக்க வேண்டும்! ஆம், அதுதான். வந்தேமாதர மந்திரம் தான்.

பெரியோர் தம் வரவை அன்புடன் எதிர் நோக்கி, திறந்த வாயிலொடு விளங்கிய வந்தேமாதர மந்திரத்தில், 1909-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் தேதி வியாழக்கிழமை காலை பத்து மணிக்கெல்லாம், அவ்வில்லத்தார் கலைமகள் வழி பாட்டுக்குரியன செய்து கொண்டிருந்தனர். உற்றார் உறவினர் யாவரும் அங்கு காணப்பட்டனர்.

குடும்பப் புரோகிதரும் வாணிபூசனை காண அங்கு வந்தார். அது சமயம் மணி சரியாக பன்னிரண்டு. வானிற் பாய்ந்து சென்ற ஓர்கன்னங் கருங்காகம் மந்திரத்தின் முற்றத்தில் நவரத்னமாலை யொன்றைப் போட்டுச் சென்றது. இந்நிகழ்ச்சி கண்ட அனைவரும் உளம் பூரித்தனர். ஆண்டவன் அருள் என்னே? என ஆச்சரியமுற்றனர். அங்கு நின்ற புரோகிதர் சோதிட நூல் வல்லுனராகை யால், "இது ஓர் நற்சகுனம். இன்றிரவு இம் மந்திரத்தில் ஆண் குழந்தையொன்று பிறக்கப் போகின்றது. அக்குழந்தை மக்களின் உள்ளத் தைக் கொள்ளை கொள்ளும் உயர்ந்தோனாய் வாழ் வான். அவனது புகழ்மணம் எத்திசையும் பரவும்" என்று கூறினர். இச்சொல் செவியிலேற்றதும், மந்திரத்தின் சொந்தக்காரர் தமக்குக் கிடைக்க விருக்கும் பேறு; இனிது வாழவேண்டுமென இறையை வேண்டினார்.

நள்ளிரவு மணி சரியாகப் பன்னிரண்டிருக்கும். பாரதத் தேவியின் மறு பெயராகிய அகிலாண்டம் மாள் எனும் திருப்பெயர்புனைந்த, அந்த இல்லத்துத் தலைவி ஆண் மகவு ஈன்றனள். குழந்தையை, பெற்றோர் மிக மிக அன்புடன் போற்றி வளர்த்த னர். அதிர்ஷ்ட வசமாக சுபசகுனத்தில் கலைமகள் பூசையன்று பிறந்த மகனன்றோ! சீனிவாசகணபதி எனப் பெயருமிட்டனர்.

வயது ஒன்று பூர்த்தி தினத்தன்று, சீனிவாச கணபதியின் தந்தை ஸ்ரீ நாராயணசாமி அய்யர் அவர்கள், ஹரிஜனங்களுக்கும் மற்ற ஏழைகளுக்கும்

அன்னமளித்தார். காலஞ்சென்ற சிதம்பரம் பிள்ளை யோடு நெருங்கிப் பழகி அவருடன் பல துறைகளில் தேசப்பணி செய்து பண்பட்டவராகையால், அந்தக் காலத்தே தீண்டாமை விலக்கு, ஏழைக்குதவுதல் போன்ற காரியங்களில் அதிகப் பங்கெடுத்துள்ளார்.

## உபநயனமும் பள்ளி வாழ்க்கையும்

ஐந்தாம் ஆண்டளவில் உபநயனம் செய்விக்கப் பெற்று பள்ளிக்கும் அனுப்பப்பட்டான். ஐந்து ஆண்டு கள் வரை, மதுரை காலேஜ் கிளைப்பள்ளிகளில் கல்வி பயின்று வரலானுன். மாணவராக இருந்த காலத் தில் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும், ஒருநாள் பொழுது போவது ஒரு யுகமாகவே இருந்தது. எப் பொழுது பார்த்தாலும் ஓயாத சச்சரவுதான்.

ஒரு நாள், பள்ளித்தோழன் ஒருவனுடைய புத்தகத்தை வேறொரு பையன் கிழித்து விட்டான். புத்தகமில்லாது தவிக்கும் அச்சிறுவனுக்கு, சீனிவாச கணபதி தனது புத்தகத்தை அவனுக்குக் கொடுத் துதவினுன். அந்தப் புத்தகத்தையும், முதலில் கிழித்த பையனே மறுபடியும் வாங்கிக் கிழித்துவிட்டான். இந்த அடாத செயலைக்கண்ட சீனிவாசகணபதிக்கு அடங்காத கோபம் மூண்டது. வகுப்பிலிருந்து பிள்ளைகள் வெளியே சென்றிருக்கும் சமயம், எல்லோ ருடைய புத்தகங்களையும் எடுத்து மூட்டைகட்டி, தன் வீட்டுக்குக் கொண்டு வந்து ஒளித்து வைத் தான். புத்தக மூட்டை தூக்கிச் செல்லுவதைக் கண்ட குழந்தைகள் ஆசிரியரிடம் முறையிட, ஆசிரியர் சீனிவாச கணபதி வீட்டுக்கு வந்து அவன்

தந்தையிடம் சொல்லி மனம் நொந்தார். தந்தை எவ்வளவு கோபித்தாலும் அதனைப் பொருட்படுத்தா தது கண்ட ஆசிரியர், புத்தகங்களைத் திரும்ப வாங்குதற்கு எடுத்துக்கொண்ட சிரமம் கொஞ்சங் கொஞ்சமல்ல. எளிய மாணவனை வலியவன் வருத்து வதை ஆசிரியர் அறிவுக்குப் புலனாகும்படிச் செய்த பெருமை இவனைச் சார்ந்ததாகும்.

1918-ம் ஆண்டில் மகாத்மா காந்தியடிகள் ஆங் கிலக் கல்வியை பகிஷ்கரிக்கும்படி நாட்டுமக்களுக்கு ஓர் செய்தி விடுத்தார். அந்த அறிக்கையைக் கண்ட ஸ்ரீ நாராயணசாமி அய்யர் உடனே தன் சிறுவனை மதுரைக் காலேஜினின்றும் வீட்டுக்கு அழைத்தார். அதனால் ஆங்கிலக் கல்வி தடைப்பட்டது. ஆனால் சிறுவன் ராமநாதபுரம் ராஜா அவர்கள் டிரஸ்டியாக விருந்த, ராமேஸ்வரம் தேவஸ்தான சமஸ்கிருத பாடசாலையில் சேர்க்கப்பட்டார். (அப்பாடசாலை மது ரையில் இருக்கிறது) வேத பாடசாலை ஆசிரியர் வட மொழி பயிற்றத்தொடங்கிய முதல் வாரத்தில், இவ னது மந்த புத்தியைக் கண்டு, இந்தச் சனியன் தொலைந்தால் போதுமென நினைத்தார். நேரிலும் சொன்னார். இக் கடுஞ்சொல் சிறுவன் காதில் நாரா சமாய்ப் பாய்ந்தது. அன்று முதல் கல்வியில் ஊக் கம் காட்டி அங்குள்ள மாணவர்களிடையே முதன்மை ஸ்தானமும் பெற்றான்.

பள்ளியில் சேர்ந்த இரண்டொரு வாரத்தில் உணவுப் போராட்டம் ஒன்று அங்கு நடைபெற்றது. வெங்காயம் சாஸ்திர விரோதமானதாகையால், பாடசாலையில் வெங்காய சாம்பார் போட அதி

காரிகள் மறுத்துவிட்டனர். இந்த விதியை ஒழித்து விடுவதென கங்கணம் கட்டினுன் நம் சிறுவன். வெங்காய சாம்பார் கொடுக்க மறுத்தால் மாணவர்கள் பாடசாலே போகக் கூடாதெனக் கட்டுப்பாடு செய்து அதற்குத் தலைமை வகித்து நடத்தினுன். இரண்டு மூன்று நாள் எவரும் பாடசாலே செல்லவில்லே. அச் சமயம் அதன் டிரஸ்டியாகிய ராமநாதபுரம் ராஜா ஸ்ரீ முத்துராமலிங்க சேதுபதி அங்கு வந்திருந்தார். இது விஷயமாக ராஜாவை நேரில் கண்டு பேசத் துணிந்தான். நேரில் கண்டுபேசி வெற்றியும் பெற்ருன். வாரத்துக்கு இருமுறை வெங்காய சாம்பார் அளிக்கப்பட்டது.

புராதன முறைப்படிதான் மாணவர்கள் ஆடை அணியவேண்டு மென்பது பாடசாலேயின் மற்ருெரு விதி. அந்த விதியையும் போராட்டமூலம் ஒழித்து, நவீன முறையில் ஆடை அணியும் முறையை உண்டு பண்ணினுன்.

ஒரு நாள் வகுப்பு நேரம் முடிந்த இடை வேளேயில் ஒரு மாமரத்தின் மீது ஏறியமர்ந்தான். செம்பு நிறங்கொண்ட மாந்தளிர்களேக் கொய்து ஆற அமர அருந்தினுன். இதனேக் கண்ட ஆசிரியர் உடல் நடுக்கங்கொண்டு, பையனேக் கீழே இறங்கி வரும்படி மன்ருடினுர். ஆனுல் பையன் “நான் கோகிலம் பழகுகிறேன். காலேயில் தாங்கள் கற்றுக்கொடுத்த பாடத்தை பரீக்ஷை செய்து கொண்டிருக்கிறேன். குயில் அதன் குரலேச்சரிப்படுத்தினுல், என் குரலே நான் பார்த்துக் கொள்ள வேண்டாமா? கீழே விழுந்து விடுவேன் என்று கலங்க வேண்டாம்” என்று கம்பீரமாய் பதிலிறுத்தான்.

பாடசாலை நேரம்போக, வீட்டிலிருக்கும் காலத்தில், வீதியில் நாடகம் சினிமா இவைகளுக்கு நோட்டீஸ் கொடுக்கப்படும் சப்தம் காதில் விழுந்தால், வீட்டிலிருந்து உடனே வெளியேறிவிடுவான். நோட்டீசு கொடுக்கும் வண்டியிலேறி, இவனே டிரம் அடிக்கத் தொடங்குவான். சில சமயம் அவர்களிடமிருந்து நோட்டீஸ் வாங்கி, தானே ஜனங்களுக்குக் கொடுப்பான். இவ்வாறு திரிவதைக்கண்ட இவனது சுற்றத்தாரும் பெற்றோரும் "பார்ப்பாரப் பிள்ளை இந்தத் தொழிலை செய்கிறானே" என்று கண்ணீர் வடித்ததுண்டு. ஆனால் அவர்கள் வருத்தத்தை பொருட்படுத்துவதில்லை. சில சமயம் தந்தையார் இதற்காக இவனை அடித்தால், உடனே வேதாந்தம் பேசத் தொடங்குவான். வேதபாடசாலை மாணவனன்றோ?

பள்ளியில் ஆசிரியர் நிர்வாகி இவர்களும் வீட்டில் பெற்றோரும், இவன் மனதுக் கிசைந்தவராயில்லாததால் மனம் நொந்துகொண்டிருந்தான். திடீரென ஒரு நாள் பையன் காணப்படவில்லை. தந்தை இவனைத் தேடியலைந்தார். கடைசியாக ஒரு நாள் திருவையாற்று சமஸ்கிருதப் பாடசாலையில் படித்துக் கொண்டிருப்பதை கேள்வியுற்று மகிழ்வெய்தினர். அப்பாடசாலையிலும் முதன்மையாகத் தேறினர். அந்தப் பள்ளியிலும், மடுவில் மாணவர்கள் குளித்தலாகாதென ஒரு விதி யிருந்தது. அதனை மீறத்துணிந்து அதில் குளித்து முழுகிவிட்டு, நேரே மதுரைக்குப் புறப்பட்டு வந்து சேர்ந்தான். அப்பாடசாலை நிர்வாகி, நிகழ்ந்ததை அறிந்து வருந்தி மீண்டும் பாடசாலையில் வந்துசேரும்படி எவ்வளவோ எழுதியும் அங்கு செல்ல மறுத்துவிட்டான்.

ஒருநாள் கும்பகோணம் சங்கராச்சாரிய சுவாமி கள் மதுரை ஆயிரக்கால் மண்டபத்தில் கொலுவீற்றி ருக்கும்போது, வேத சம்பந்தமான தன் திறமையை அன்னார் முன்னிலையில் நிரூபிக்க முற்பட்டான். வட மொழியில் இவனது திறமையைக் கண்ட சங்கராச் சாரியார் பரிசுகள் பல வழங்கினார். அத்தகைய பரிசு கள் வேத சாஸ்திர விற்பன்னர்களாகிய கனபாடிகள் போன்றோர் தான் பெறுவது வழக்கம். ஆதலால் அங் குள்ள படித்த கூட்டத்தார் பொறுமைப்படலானார்கள்.

இவ்வாறு எடுத்தகாரியம் யாவினும் வெற்றி கண்டு, கல்வித்துறையிலும் சிறப்புற்றான். "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்னும் முது மொழி பொய்க்காதன்றோ!

## அன்னை பிரிவும் ஆசிரிய வேலையும்

"தந்தை மகற் காற்று முதவி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

எனும் தமிழ் மறையைச் சிந்தித்த தந்தை, மகனுக்கு கல்விப் பெருநிதியை அளிக்கத் தன்னாலியன்றவரை முயன்றும், பள்ளியாலடையும் கல்விக்கு அவனது வாலிபச்சேட்டை போதுமான அளவு அனுமதிக்க வில்லை. இவ்வாறு வளர்ந்து வருங்காலத்தில் தவத்தாற் பெற்ற அம்மையார் 1922 பெப்ரவரி 6ம் தேதி இவ் வுலகு நீத்தார். அன்னையின் பிரிவு காரணத்தால் மனம் புழுங்கி வாடினான். சகோதர சகோதரிகளது வாழ்க் கையை எவ்வாறுயினும் கொண்டு செலுத்த வேண் டுமே என்னும் கவலை வரவே, தந்தையின் சொற்படி பெரியகுளம் தாலுகாவைச் சார்ந்த சிந்தலச்சேரி என்

னும் கிராம ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் 16-வது வயதில் உதவி ஆசிரியராக அமர்ந்தார்.

நவீன முறையில் தேசியப் பாடல்களும் பாடங்களும் அங்கு மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கப் பட்டன. விடுமுறை காலங்களில் பாரதியார் பாடல்களைப் பாடிக்கொண்டு ஊர்வலமும் வருவதுண்டு. ஒரு நாள் பள்ளிக்கூடம் இன்ஸ்பெக்டர் பள்ளியைப் பார்வையிட வந்திருந்தார். அவரது தடபுடல்களையும், தன்னை நடத்திய மனப்பான்மையையும் கண்ட நம் ஆசிரியர் சீனிவாச கணபதிக்கு, கோபம் பொங்கிற்று. மனிதனை மனிதனுகப் மதிக்காத அந்த அதிகாரிக்கு புத்தி புகட்ட நினைத்தார். அங்கு வந்திருந்த மாணவர்களைப் பார்த்து, "அடே! பையன்களா! இவர்தான் அம்மை குத்துகிறவர்" என்று முடிப்பதற்குள், அந்த கட்டிடத்தில் அதிகாரியும் ஆசிரியரும் தான் மீதம். பிள்ளைகள் மாயமாய் மறைந்துவிட்டார்கள். அதிகாரியை திரும்பி நோக்கினுர். "ஐயா! நல்ல நேரத்தில் இங்கு வந்தீர்கள். உங்கள் சாப்பாட்டுக்கு வழி? எப்படிச்சாப்பிடுகிறீர்கள் என்று பார்க்கிறேன்" என்று கூறி வெளியே சென்றுவிட்டார். அதிகாரிக்கு இன்னது செய்வதென விளங்கவில்லை.

அந்தக் கிராமத்தைச் சுற்றி ஆறு மைல் சுற்றளவுக்குள் காப்பி ஹோட்டலோ சாப்பாட்டு ஹோட்டலோ எதுவும் கிடையாது. நேரமோ நண் பகல் 12-மணி. அந்த வெயிலில் மனிதனுகப் பிறந்தவன் ஆறு மைல் நடந்து போய் சாப்பிட்டுத் திரும்பிவர முடியாது. குழந்தைகளைத் தன்னுலானமட்டும் கூப்பிட்டும் அவர்கள் திரும்பிப் பார்ப்பவர்களாயில்லை. ஆசிரி

யரைக் கெஞ்சிக் கேட்டாலொழிய, வேறு வழியில்லை எனத் தெரிந்தது. அவ்வாறே ஆசிரியர் சீனிவாச கணபதியின் உதவி பெற்று குழந்தைகளை அழைத்து வந்து பரீக்ஷை நடத்திச் சென்றார். இது விபரத்தை அந்த அதிகாரி, அப்பள்ளியின் அறிக்கைப் புத்தகத்தில் குறித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்ச்சியை அறிந்த தந்தை நாராயணசாமி அய்யர் மனம் வருந்தியவராய் கடிந்துகொள்ள, "நாயும் பிழைக்கும் இந்த பிழைப்பு—எட்டு ரூபாய் கிரேண்ட் வாங்க இத்தனை அடிமைத்தனைகளா? என்று கூறி, வெஞ்சினங் கொண்டு வெளியேறினார்.

பக்கத்துக் கிராமமாகிய லெட்சுமி நாய்க்கன் பட்டியில், சொந்தமாக ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து தலைமை ஆசிரியராக அமர்ந்து சிறந்த முறையில் நடத்தி வந்தார்.

சில மாதங்களில் அந்த ஊரையும் விட்டுவிட்டு சிந்தலச்சேரிப் பள்ளியில் ஆசிரியரானார். அவ்வாறு இருக்கும்போதே, அய்யம்பட்டி என்ற பக்கத்து ஊரிலுள்ள ஒரு சிலர், சிந்தலச்சேரி ஏழைகளைக் கொடுமைப்படுத்துவது கண்டு, அடிக்கடி புத்திமதி சொல்லுவதுண்டு. ஒருநாள் இருகட்சியினருக்கும் சண்டை மூண்டது. சிந்தலச்சேரி மக்களது கையில் ஆயுதமில்லாக் குறையால் புறங்காட்டலானார்கள். அத்தருணம் இந்த ஆசிரியர் விரைந்து சென்று, ஒரு குச்சியினால் எதிரிகளது கையிலிருந்த ஆயுதங்களைப் பிடுங்கி, சிந்தலச்சேரி ஜனங்கள் கையில் கொடுத்து பெரும் சண்டையை மூட்டிவிட்டார். இறுதியில்

சிந்தலச்சேரி மக்கள் வெற்றிபெற்றதால் கொடுமையி னின்றும் விடுதலை பெற்றனர்.

அன்று முதல் ஆசிரியர் வேலையில் வெறுப்புற்ற வராய் நாகப்பட்டணம் போய்ச் சேர்ந்தார். உண வுக்கு வழி எதுவும் கிடையாததால், தொழிற்சாலை யில் வேலைக்கமர்ந்தார். முதன் முதலில் சம்பளமின்றி சிறிது காலத்தில், வேலைமுறை பழகிய பிறகுதான் இரண்டு அல்லது மூன்று அணு சம்பளம் கிடைக் கும். அதற்கிணங்கி வேலை பழகும்போதே இரண் டொரு நாளில் பக்கத்தில் வேலை செய்வதைப் பார்த்துக்கொண்டே இருந்து பூட்டுகள் அராவுதற்கு தொடங்கினர். அவ்வாறு சகோதரத் தொழிலாளர் களின் வேலையையும் தானே பார்த்துக் கொடுத்து உதவி புரிந்தார். இது மேலதிகாரிகளுக்குத் தெரிய வில்லை சில காலம்வரை.

ஆனல் ஒரு சில தொழிலாளிகள், எப்பொழு தும் முன்பு செய்த வேலையைவிட இருமடங்கு மும்மடங்கு அதிகமாக வேலை செய்து அதிகக் கூலிபெறுவதன் காரணமென்னவென ஆலோசித் துக் கொண்டிருந்தனர். கடைசியாக சீனிவாச கணபதிதான் இதற்குக் காரணம் எனத் தெரிய வந்தது. அன்று முதல் சிறிது தொகை கூலியாகப் பெற்று வந்தார்.

ஒருநாள் கும்பகோணத்தில் பூட்டு ஒன்று திறப்பதற்காக சில தொழிலாளிகள் அனுப்பப்பட்ட னர். கையாளாக இவரும் சென்றிருந்தார். எவரும் திறக்க வழி தெரியாது தயங்கும்போது, தனது

மதிநுட்பத்தால் அதனைத் திறந்து கொடுத்தார். அதற்காக அத்தொழிற்சாலையார் அதிகச் சம்பளம் கொடுக்கத் தீர்மானித்தனர். ஆனால் அவ்வேலையையும் உதறித்தள்ளிவிட்டு 1928 மேமாதம் காரைக்குடி வந்து சேர்ந்தார். சீனிவாசகணபதி என்னும் பெயர் அதிக நீளமாகவிருப்பதால், அதைக்குறுக்கி விடுவது நலமெனக்கருதி, தந்தையின் பெயருக்கு அடையாளமாக "N" ம், சீனிவாசன் என்பதற்கு "S" ம் விலாசமாகக்கொண்டு N. S. கணபதி என குறுக்கிக்கொண்டார்.

## காரைக்குடியில் வாழ்க்கை

ஊருக்குப் புதியவராகையாலும், கையில் பணம் எதுவுமில்லாததாலும் பத்துப் பதினைந்து நாள் பட்டினியிருக்க நேர்ந்தது. ஆனாலும் வாழ்க்கையில் திட நம்பிக்கை குறையவில்லை. ஆகையால் காப்பி ஹோட்டல் தொழில் பார்த்தேனும் ஜீவிக்கலாமென்ற கருத்துடன் கல்லுக்கட்டியில், அன்று பெரிய ஹோட்டலாக விருந்த ஸ்ரீ மீனாட்சி சுந்தர பவானில் வேலைக்கமர்ந்தார். முதலில் சப்ளையராகவும், சில மாதங்கள் சரக்கு மாஸ்டராகவும் வேலைபார்த்து வரும்போது, அடிக்கடி பத்திரிகை படித்து வருவதையும் ஏதேதோ எழுதுவதையும் கவனித்து வந்த ஹோட்டல் சொந்தக்காரர், இவர் மீது அன்பு கொண்டு காஷியராக வைத்து, சிறிது ஓய்வு கொடுத்தார். அந்தக் காலத்தை பத்திரிகைகளுக்கு கட்டுரை வரைவதன் மூலம் செலவிட்டு வந்ததால் சிறிது அதிக வருமானமும் கிடைக்கலாயிற்று.

### கல்கத்தா ஊழியம்

1928 டிசம்பர் 26-ம் நாள் கல்கத்தாவில் அகில இந்திய காங்கிரஸ் மகாசபை கூடியது. காலஞ் சென்ற பண்டித மோதிலால் நேரு தலைமை வகித்த அம் மகாநாட்டிற்கு, தொண்டர்படைத் தலைவராக ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் விளங்கினார். ஸ்ரீ போஸின் இயற்கைத் தோற்றமும், அணிந்திருந்த உடையும், படைகளுக்கு உத்தரவிடும் பெற்றியும், படைகளை அணிவகுத்து நடாத்திய கம்பீரத் தன்மையும் கண்டோர் மனதைக் கலங்கச் செய்தன. பிற நாட்டுத் தளகர்த்தர்களே திடுக்கிட்டரெனின் அதிகம் கூறுவானேன்.

அந்தப் படையில் தமிழகத்து சிப்பாயாக நின்று ஊழியம் புரியும் பேறுபெற்றார் நம் தோழர் கணபதி. மகாசபை செவ்வனே நிறைவெய்திய பின்னர் 1929 ஜனவரி இறுதியில் தமிழகம் வந்து சேர்ந்தார். சிறிது காலம் ஹோட்டல் தொழில் ஒருபுறமும், பொது நலச்சேவை ஒருபுறமுமாகச் செலவிடலானார்.

## உப்பு சத்யாக்ரகம்

1930-ம் ஆண்டு எப்ரல் 6-ம் நாள், இந்தியச் சரித்திரத்தில், பொன்னெழுத்தால் பொறிக்கப்பட்ட முக்கிய நாளாகும். அன்றுதான் எம்மான் காந்தியடிகள் உப்பு சத்தியாக்ரகத்தை மேற்கொண்டு டாண்டியை நோக்கி யாத்திரை சென்றார். அந்த அறப் போர் குமரி முதல் இமயம் வரை பரந்து விரிந்தது. எங்கு நோக்கினும் தொண்டர்படைகள் அணிவகுத்

துப் போர்க்கோலம் பூண்டன. தேசியத் தொண்டர் படையை அடக்கியொடுக்க, போலீசும் ராணுவப் படையும் மிகக் கடுமையாக முனைந்து நின்றன.

தமிழகத்திலும் ஸ்ரீ C. ராஜகோபாலாச்சாரியார் தலைமையில் போர் ஆரம்பமாயிற்று. வேதாரண்யம் போர்க்களமாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றது. ஒவ்வொரு நகரங்களிலும் கிராமங்களிலும் தொண்டர்கள் போருக்கு முந்தினர். அத்தருணம் காரைக்குடியை தலைமை ஸ்தானமாகக் கொண்டு ஸ்ரீ பொ. திருகூடசுந்தரனார் சத்தியாக்ரகப் பொறுப்பை ஏற்று நடத்தினார். செட்டிமார்நாடு முழுமையும்—ஒவ்வொரு சந்து பொந்திலும் போர்க்குரல் ஒலித்தது. இடைவிடாத சொற்பொழிவுகள், நிதி வசூல் ஆகியன நடைபெற்றன. இன்று செட்டிமார்நாடு தேசிய உணர்ச்சியில் முதன்மை பெற்று விளங்குகிற தெனின், அதற்கு ஸ்ரீ திருகூடசுந்தரனார் அன்று செய்த உழைப்பும் கிளர்ச்சியுமேதான் காரணம்.

செட்டிமார் நாட்டுத் தேசியத் தொண்டர்படை முதன் முதலாவதாக காரைக்குடியினின்றும் அனுப்பப்பட்டது. அம் முதற்படையில் தோழர் கணபதியும் ஒருவராய்ச் சேர்ந்தார்.

1930 ஜுன் 2-ம் நாள் பிற்பகல் 1-30 மணிக்கு முதற்படை பிரயாணமாயிற்று. 4-ம் நாள் வேதாரண்யம் ரயில்வே ஸ்டேஷனில் இறங்கியதும் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் இப்படையினரை கைதி செய்து சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் கொண்டுபோனார். அங்கு சர்க்கிள் இன்ஸ்பெக்டரும் டெபுடிசூப்ரிண்

டும் இவர்களை தத்தம் ஊருக்குச் செல்லுமாறு வேண்டினார்கள். எவரும் அம்மொழிக்குச் செவி சாய்ப்பராயில்லை. உடனே ரயிலிலேற்றி பூதலூருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அது சமயம் சப் மாஜிஸ்திரேட் அங்கு இல்லாததால், விசாரணைக்காக திருச்சிக்கு கொண்டு வரப்பட்டார்கள். வரும் வழியிலேயே இவர்களை அழைத்து வந்த போலீஸ் கான்ஸ்டபிள் மாயமாய் மறைந்துவிட்டார். இம் மாயச் செயல்கண்ட கணபதி படையினர் மூன்று பிரிவாகப் பிரிந்து, மீண்டும் வேதாரண்யம் நோக்கினர்.

10-ம் தேதியன்று தஞ்சை யடைந்ததும் அங்கு கைதி செய்யப்பட்டு, விசாரணையின் பின்னர் ஆறு மாதக் கடுங்காவல் தண்டனைக்கு ஆளானார். திருச்சி சிறையில் தண்டனை அனுபவிக்க நேர்ந்தது. அச்சமயம் சிறைக்குள்ளே, அரசியல் கைதிகள் தமக்கு சிறைவிதிகள் தரவேண்டுமெனக் கிளர்ச்சி செய்தனர். அக் கிளர்ச்சியில் அதிகப் பங்குகொண்டு வெற்றி பெற்றவர்களுள் நம் கணபதியும் ஒருவர்.

இரண்டொரு மாதங்களில் பல்லாரி சிறைக்கு மாற்றப்பட்டார். அங்குதான் தமிழ்நாட்டுத் தலைவர் ஸ்ரீ C. ராஜகோபாலாச்சாரியார் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்தார். இப்பெரியாருடன் ஒன்றாக வாழும் நல்ல சந்தர்ப்பம் தோழருக்கு கிடைத்தது ஓர் சுப சகுனமாகும். அங்கு தனக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை, செலவிட நேர்ந்தமை குறித்து, ஸ்ரீ கணபதி அடிக்கடி அகமகிழ்வதுண்டு,

## தேவகோட்டையில் கல்லெறி

ஆறு மாதத் தண்டனைக் காலம் முடிந்து டிசம்பர் மாதம் 2ம் தேதி இரவு காரைக்குடி வந்து சேர்ந்தார். சிறையில் பெற்ற அறிவும் அனுபவமும் மக்களுக்கு உதவ வேண்டுமென்னும் பேரவா பிடர் பிடித்துந்த, ஆண்மையும் வீரமும் வீறிட்டெழுந்தன. டிசம்பர் 10ம் தேதி தேவகோட்டை வெள்ளையன் ஊருணிக் கீழ்கரையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக் கூட்டத்தில் தோன்றினர். வீரக் கனல் கொண்ட சொன்மாரியைக் கேட்ட பொது மக்கள் தன்னை மறந்திருந்தனர். பேச்சு முடியுந் தறுவாயில் கூட்டத்திலிருந்த தேசத் துரோகியொருவர் கல்லொன்று வீசினர். அது கூட்டத்திலிருந்த சிறுவன் ஒருவனைத் தாக்கிற்று. இரத்தம் பீறிட்டது. கூட்டத்தில் பெரும் பரபரப்பு ஏற்படவே, சாதாரண உடையில் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் அவர்கள் அங்கு தோன்றி "இனிப் பொறுக்கமுடியாது. உடனே கலைந்து போங்கள்" எனக் கூட்டத்திற்கு உத்தரவிட்டார். உணர்ச்சி ததும்பிய மக்கள் எவரும் கலைவதாகத் தெரியவில்லை. "இன்னும் பேசுங்கள்—பேசுங்கள்" என்ற ஒரே குரல் வானைப்பிளந்தது. ஆனல் சிறுவன் நிலைமையை கூட்டத்தினருக்கு உணர்த்தி, கூட்டத்தையும் கலைத்துவிட்டு, ஸ்ரீ கணபதி சிறுவனை ஸ்பெஷல் மோட்டார் ஒன்றில் ஏற்றிக்கொண்டு காரைக்குடி வந்துசேர்ந்தார். உடனே டாக்டர் சுப்பிரமணியம் அவர்களிடம் சிகிச்சை செய்து குணப்படுத்தி தேவகோட்டைக்கு அனுப்பிவைத்தார்.

## காரைக்குடியில் 144

மறுநாள் மாலை 5-மணிக்கு காரைக்குடி காந்தி சதுக்கத்தில் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப் பட்டது. மூவர்ணக்கொடி தாங்கிய தொண்டர்கள் அணிவகுத்து ஊர்வலமாக வந்து கொண்டிருந்தனர். அவர்கள் சதுக்கத்தை அடையுமுன்னர், ஏராளமான மக்கள் அங்கு கூடிவிட்டனர். அது சமயம் போலீசார் அவர்களைக் கலைந்து செல்லுமாறு வேண்ட, ஜனங்கள் நாலு பக்கங்களிலும் சிதறி, சதுக்கத்தின் ஓரங்களில் ஒதுங்கி நின்றனர். சரியாக மணி 6-க் கெல்லாம் ஊர்வலம் சதுக்கத்தை அடைந்ததும் சிதறிய மக்கள் மீண்டும் ஒன்ருகக் கூடினர். கூட்டம் ஆரம்பமாகும் சந்தர்ப்பம். தடிகள் தாங்கிய பத்துப் பதினைந்து கான்ஸ்டபிள்களுடன் வந்த சப் இன்ஸ்பெக் டர் 144 தடையுத்தரவை தோழர் கணபதிக்குக் கொடுத்தனர். அவ்வுத்தரவில் "இரண்டு மாதங்களுக்கு திருப்பத்தூர் தாலுகா எல்லைக்குள் எவ்வித பிரசாரமும் செய்யக்கூடாது" என்று குறிப்பிடப்பட்டிருந் தது. ஆதலால் கூட்டம் நடைபெறச் செய்ய இயலாது போயிற்று. ஆனல் நண்பர் கணபதி, இரண்டுமாத காலத்தையும் இதர தாலுகாக்களில் செலவிட்டு நிறைய தொண்டர்கள் சேர்த்து வந்து, திருப்பத்தூர் தாலுகாவில் வேலைசெய்வதென்ற முடிவை மேற் கொண்டார்.

## தேவகோட்டையிலும் 144

பக்கத்துத் தாலுகாவாகிய திருவாடானைத் தாலு காவில் முதன் முதலாவதாக தம் பிரசாரத்தை நடத்

துவதென நிச்சயித்து, டிசம்பர் 18-ம் நாள் தேவ கோட்டை சென்ருர். அங்கு ஏற்கனவே பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. திண்ணஞ்செட்டி ஊருணி வடகரையில் ஏராளமான மக்கள் கூடினர். கொடி வணக்கத்தின் பின்னர் தேசீய கிதம் பாடிக்கொண்டிருக்கும் சமயத்தில், ஸ்தல போலீசார் தடிகளுடன் கூட்டத்தில் பிரவேசித்தனர். கூட்டத்தைக் கலேக்க முயற்சித்தனராயினும், கூட்டத்தின் நிலேமை கண்ட போலீசார் அம்முயற்சியை நழுவ விட்டுவிட்டனர். ஆனல் டிவிஷனல் மாஜிஸ்திரேட்டால் கொடுக்கப்பட்ட 144 தடையுத்தரவை தோழர் கணபதிக்கு வழங்கினர். அதைப் பெற்றுக் கொண்டதும், தடையுத்தரவை அது சமயம் தான் மீற விரும்ப வில்லே எனக் கூட்டத்தினருக்குக் கூறி, கூட்டத்தையும் கலேத்துவிட்டு பக்கத்துக் கிராமங்களே நாடிச் சென்ருர்,

## வானர சேனேயும் பிரபாத் பேரியும்.

பல கிராமங்களுக்குச் சென்று தொண்டர்கள் சேர்த்துக்கொண்டு ஒரு மாதத்திற்குள் காரைக்குடிக்குத் திரும்பினர். தனது குறிக்கோள் வெற்றிபெற, காரைக்குடியில் "வானர சேனே" என்ற பெயரால் ஓர் ஸ்தாபனத்தை நிறுவினர். தேசீய வேலே திறம்பட நடக்கலாயிற்று. அதற்கு மற்ருெரு உறுதுணே வேண்டுமெனக் கருதி "பிரபாத் பேரி" என்ற சங்கத்தையும் தோற்றுவித்தார். இவ்விரண்டும் நகருக்கு ஆற்றிய தொண்டு பலஉள. பொது மக்கள் ஆதரவும், வானர சேனேயின் ஊக்கமும் நண்பர் கணபதியின் உழைப்புக்கு ஆக்கம் தந்தன.

## தலைவருக்கு உதவி

இவ்வாறு செவ்வனே நடைபெற்று வருங்காலை, சிறையினின்றும் விடுதலையான தலைவர் ஸ்ரீ பொ. திருகூடசுந்தரனார் 1931 மார்ச்சு 30ம் நாள் காரைக்குடி வந்து சேர்ந்தார். தலைவர் வருகை கண்ட தோழர், தலைவரது தேசிய வேலைகள் இடுக்கணின்றி இனிது நடைபெற வேண்டுமெனும் நோக்கத்துடன் ஏப்ரில் முதல் வாரத்தில் கீழ்க்கண்ட அறிக்கையொன்றை விடுத்தார்.

"சென்ற வருஷம் மகாத்மா காந்தியடிகள் ஆரம்பித்த சத்தியாக்கிரஹப் போருக்காக ஸ்ரீமான் பொ. திருகூடசுந்தரம் அவர்கள் இந்தச் செட்டிமார் நாட்டில் தொண்டர்கள் சேர்த்தார். சேர்ந்து சிறை சென்ற தொண்டர்களில் ஒருவனாகிய நான் விடுதலையும் அடைந்தேன்.

சிறையிலிருந்த பொழுது, தலைவர் அவர்களும் சிறைபுகுந்து விட்டார்கள். அதனால் நான் விடுதலை பெற்றவுடன், என்னாலியன்ற சத்தியாக்கிரகப் பிரசாரம் செய்ய விரும்பினேன். தலைவர் அவர்கள் சத்தியாக்கிரக சம்பந்தமாக ஏற்படுத்தியிருந்த கமிட்டியாரிடம் பண உதவிபெற்று வேலை செய்து வந்தேன். மகாஜனங்களாகிய நீங்களும் எனக்கு ஆதரவும் உற்சாகமும் அளித்தீர்கள். அதற்காக என் மனமார்ந்த வந்தனம். இப்பொழுது தலைவர் அவர்கள் விடுதலைபெற்று விட்டார்கள். அவர்கள் இனிச் செய்யவேண்டிய காங்கிரஸ் வேலைகள் சம்பந்தமாய், கூடிய சீக்கிரம் ஏற்பாடுகள் செய்யப்

போகின்றார்கள். அதனால் நான் ஏற்படுத்தியுள்ள 'வானர சேனை'யையும் 'பிரபாத்பெரி' சங்கத்தையும் இன்று கலைத்து விடுகிறேன். தலைவர் அவர்கள் வேலை தொடங்கும்போது அவர்களுடன் சேர்ந்து உழைக்கத் தீர்மானித்திருக்கிறேன். முதலில் அவர்களுக்கும், பின்னால் எனக்கும் உதவி செய்ததுபோல், இனியும் நீங்கள் செய்வீர்களென்று நம்புகிறேன்."

தலைவர் மீது எவ்வளவு அன்பும் நேர்மையும் கொண்டு உண்மையை உள்ளவாறுகூறி, உதவி புரிந்துள்ளார் தோழர் கணபதி என்பதை இவ்வறிக்கை வாசகர்கட்கு நன்கு தெளிவுறுத்தும்.

## தொழிலாளருக்கிடையே நட்பு

உலகப் பொருளாதார மந்தம் செட்டிமார் நாட்டையும் எட்டிப்பார்க்கத் தொடங்கிற்று. அந்த மந்தத்தை மாற்ற, தனவைசியர்கள் தொழிலாளர் தலையில்—அல்ல அடிவயிற்றில் கை வைக்க ஆலோசனை செய்தனர். அதற்காகக் கூட்டப்பட்ட தனவைசிய நகரக் கூட்டத்தில், தொழிலாளர்கட்கு நூற்றுக்கு 25 விகிதம் கூலியைக் குறைத்துக் கொடுப்பதெனத் தீர்மானம் ஒன்று நிறைவேறிற்று. இந்தத் தீர்மானம் அமுலில் வரும்போது கொத்து வேலையாளர்—தச்சு வேலையாளர்—நகைத்தொழிலாளர்—கல் வேலையாளர் ஆகியோர் பெரிதும் பாதிக்கப்பட்டனர். உணர்ச்சி மேலீட்டால் கிளர்ச்சி செய்யத் தலைப்பட்டனர். 1931 ஜூன் 15-ம் தேதி, தங்கள் நிலைமையைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் மேலே குறிப்பிட்ட தொழிலாளர்கள் காந்தி சதுக்கத்தில் ஒரு பொதுக் கூட்டத்தை நடத்தினர். அந்தக்

கூட்டத்தில் தொழிலாளர்களுக்காகத் தொழிலாளர் தோழன் கணபதி ஒரு மணி நேரம் சொற்பொழி வாற்றினர். தொழிலாளர் சங்கம் ஒன்று அப்பொழுதே நிறுவப்பட்டது. அதற்கு தோழர் கணபதி பொக்கிஷதாரராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ருர். உணர்ச்சி ததும்பிய அன்றையப் பேச்சு தனவந்தர்களைச் சிறிது மனமாற்றமடையச் செய்தது. அதன் பயனுக நூற்றுக்கு 25 விகிதம் கூலி குறைப்பது என்றிருந்த தீர்மானம் நூற்றுக்கு 12½ விகிதம் குறைத்தால் போதுமானது என்ற நிலைமைக்கு வந்தது. தோழர் கணபதியின் பேச்சுத் திறமையும் மதிநுட்பமும், தங்களுக்கு அளித்த பேருதவியை நினைத்து, தொழிலாள வர்க்கத்தார் அவருடன் அதிக நெருக்கமும் பேரன்பும் கொள்ளுவாராயினர்.

## கோட்டையூரில் கைதி

மகாத்மா காந்தியடிகள் இங்கிலாந்திலிருந்து தாய்நாடு திரும்பிவந்ததும் கைதி செய்யப்பட்டார். தொடர்ந்தாற்போல் நாட்டின் தலைவர்கள் பலர் கைதியாயினர். சர்க்காரின் இச்செயலைக் கண்டிக்கும் பொருட்டு நாடெங்கும் ஹர்த்தாலும் பொதுக்கூட்டமும் நடைபெற்றன. அது சம்பந்தமாக கோட்டையூர் ஜவஹர் சங்கத்தில் 1932 ஜனவரி 8-ம் தேதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் ஜீவானந்தமும் தோழர் கணபதியும் சொற்பொழி வாற்றினர். பள்ளத்தூர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஆறு கான்ஸ்டபிள்களுடன் அங்கு வந்து, 144 தடையுத்தரவை மீறிப் பேசினமைக்காக இருவரையும் கைதி செய்தனர். சில மணி நேரத்தில் போலீஸ்

ஸ்டேஷனிலிருந்து விடுதலை பெற்ற தோழர் கணபதி காரைக்குடி வந்து சேர்ந்தார்.

## இரண்டு வருடங் கடுங்காவல்

1932 பெப்ருவரி மாதம் 4-ந் தேதி தேவகோட்டை காந்தி சதுக்கத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திரளாக மக்கள் கூடியிருந்தனர். தோழர் கணபதி பேச எழுந்தார். அங்கு தயாராகக் காத்திருந்த போலீஸார் தடைசெய்து, கூட்டத்தைக் கலைந்துபோக உத்தரவிட்டனர். கூட்டம் கலைய மறுக்கவே சப் இன்ஸ்பெக்டர் தோழரைக் கைது செய்து ஸ்டேஷனுக்குக் கொண்டு போனார். அங்கு அவருக்கு எச்சரிக்கை கொடுத்து விடுதலையளித்தனர்.

சில தினங்களில், சட்டமறுப்பு சம்பந்தமான வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாக ஸ்ரீ கணபதி மீண்டும் கைது செய்யப்பட்டு தேவகோட்டை ஜாயின்ட் மாஜிஸ்திரேட்டு முன் நிறுத்தப்பட்டார். 1908-வது வருடக் கிரிமினல் திருத்தச் சட்டம் 17(2) பிரிவுப்படி, குற்றவாளியெனக் கருதப்பட்டு, இரண்டு வருடக் கடுங்காவல் தண்டனையடைந்தார். ஆனால் தண்டனைக் காலம் முடிவதற்குள் 1932 ஆகஸ்டு மாதம் 2-வது வாரத்தில் விடுதலையானார்.

விடுதலை அடைந்ததும் இரண்டு மாதத்திற்குள் சென்னைக்கு தனது தோழர்களுடன் சென்றார். அது சமயம் காந்திஜி—இர்வின் ஒப்பந்தம் முறிந்து போனதால் போராட்டம் மீண்டும் ஆரம்பமாக விருந்தது. இச்சந்தர்ப்பத்தை நழுவவிட மனமில்லாத

வராய் சென்னை நகரின் பல விடங்களில் தேசீய மூவர்ணக் கொடியை ஏற்றுவித்தார். சென்னை சென்டிரல் ஸ்டேஷனில் கொடியை ஏற்றுவிக்க முயற்சித்த சமயத்தில், போலீசாரால் கைது செய்யப்பட்டு அடக்குமுறைக்கு பலியானார். 15 நாள் சிறைத் தண்டனையை தன் சகாக்களுடன் அனுபவித்துவிட்டு காரைக்குடிக்குத் திரும்பினார்,

1933 ஜனவரி 4-ம் தேதி பள்ளத்தூரில் காந்தி ஜயந்திக்காக இவரை அழைத்துச் சென்றனர். பொதுக்கூட்டத்தில் பேசி முடிந்ததும், ஸ்தலப் போலீஸார் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று சிறிது நேரத்தில் விடுதலை செய்தனர்.

ஜனவரி 26-ம் நாள் சுதந்திர தினம் சென்னையில் யில் நடைபெற்றது. அதில் பங்கெடுத்துக்கொள்ள விரும்பி, தன் நண்பர் எழுவருடன் அங்கு சென்று தேசியக்கொடி தாங்கி ஊர்வலமாக வந்து கொண்டிருக்கும்போது, மெடிகல் காலேஜ் முன்னால் கைது செய்யப்பட்டு, பெனிட்டன்ஷியரில் ரிமாண்டு கைதியாக்கப்பட்டார். விடுதலையான பின்னர் காரைக்குடி பிரயாணமானார்.

## தீண்டாமை விலக்குத் தொண்டு

மகாத்மா காந்தியடிகள் மக்களிடையே காணப்படும் துன்பங்களுக்கெல்லாம் காரணமாகிய தீண்டாமைப் பேயை ஒழித்துவிடுவதெனக் கங்கணம் கட்டினார். அதற்காகத் தன் உயிரையும் பலியிட முனைந்தார். நாட்டிலுள்ள மக்கள் பரபரப்பெய்தினர். எங்கும்

தீண்டாமை விலக்கு சங்கங்கள் தொடங்கப் பெற்றன. காரைக்குடி ஜில்லாவிலும் ஜில்லாக்கமிட்டி அமைக்கப் பட்டு வேலை மும்முரமாக நடந்தது. 1933 பெப்ரவரி 25ம்தேதி காரைக்குடி மரு.சு. மாடியில் நடைபெற்றது அந்தக் கமிட்டிக் கூட்டத்தில் தோழர் கணபதி ஜில்லா தீண்டாமை விலக்கு பிரசாரகராக நியமிக்கப்பட்டார். திருப்பத்தூர் தாலூகாவிலும் சிவகங்கை தாலூகாவி லும், கமிட்டி கட்டளைக்கிணங்க பிரசார வேலையை மேற்கொண்டார்.

ஒருநாள் மார்ச்சு மாதம் 3ம் தேதி காரைக் குடி மூத்தூரணி கீழ்கரையில், தீண்டாமைவிலக்குப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பேசும் பொழுது "வைதீகரென்போரும், உயர்குலத் தோரென்போரும் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும். காலத்துக்கேற்ப, அவர்கள் இன்று தீண்டா மையை ஒழிக்க முற்படாவிட்டால், சிறிது நாளில் பிராமண அக்ரகாரம் என்பது பிராமணச் சேரியாக வும், பறையச்சேரி என்பது பறைய அக்ராகாரமாகவும் அழைக்கப்படும் நிலைமை ஏற்படும்" என்று வடமொ ழிச் சுலோக மேற்கோள்களுடன் வீராவேசமாகப் பேசினார். இம்மொழிகள் பக்கத்திருந்த வைதீகர்கள் மனதைத் தைத்தன. உடனே போலீசாரிடம் சென்று ஒன்றுக்கிரண்டாகக் குறை யுரைத்தனர். தீர விசாரி யாமலும் முன்பின் யோசனை யின்றியும், சப் இன்ஸ் பெக்டர் புரொபேஷனரி இன்ஸ்பெக்டருடன் சர்விஸ் மோட்டார் ஒன்றிலேறி ஸ்தலத்துக்கு வந்து, யாரை யும் எதையும் கேட்காமல் சவுக்காலடித்து கூட்டத் தைக் கலைத்தார். கணபதிக்கும் முதுகில் இரத்தம் காணப்பட்டது. சர்விஸ் காரில் ஏற்றிக்கொண்டு

போய் போலிஸ்டேஷனில் முச்சலிகாவில் கையெழுத்து வாங்கிய பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

இது தகவல் அறிந்த ஜில்லாக் கமிட்டியார், மறுநாள் காரைக்குடி காந்தி சதுக்கத்தில் தலைவர் எ. ரெங்கசாமி அய்யங்கார் தலைமையில் கண்டனக் கூட்டம் நடத்தி, கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றினர். தீர்மானங்கள் போலிஸ் மேலதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டன. பலமுறை அதிகாரிகள் விசாரணை செய்தனர். ஒவ்வொரு விசாரணையின்போதும் பெருந்திரளான மக்கள் அங்கு சென்று கவனிப்பதுண்டு. விசாரணையின்போது, கணபதி, கேள்விகளுக்குப் பதிலிறுத்ததும், சப் இன்ஸ்பெக்டரை குறுக்கு விசாரணை செய்ததும் கண்டு அதிகாரிகளே திகைத்தனர். கணபதி புத்திசாலித்தனத்தைக் கண்ட பொது ஜனங்கள் புகழ்ந்து கொண்டாடினர். சிலநாள் வரை ஊருக்குள் அதே பேச்சுதான்.

இது விஷயத்தை அறிந்த கல்லல் ஆதித்திராவிட சங்கத்தார், தங்களூருக்கு வரவேண்டுமென கணபதிக்கு அழைப்பு அனுப்பினார்கள். அதை மகிழ்வுடன் ஏற்று 11—3—33ல. அங்கு சென்று ஆதித்திராவிடர்களுடன் உணவருந்திவிட்டு, இரவு ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக்கூட்டத்தில் தீண்டாமையால் வரும் இன்னல்களையும் அதை ஒழிக்கவேண்டிய அவசியத்தையும், இந்த விஷயத்தில் போலிசாரும் சர்க்காரும் நியாய உணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டிய கடமையும் பற்றி விரிவாகப்பேசினார். பிரசங்கத்தைக் கேட்டிருந்த பாகனேரி சப் இன்ஸ்பெக்டர் ஆத்திரங்கொண்டு, கூட்டத்தைக் கலைக்க தடபுடல் நாட

கம் நடத்தினர். உணர்ச்சி ததும்பிய கூட்டமா கலை யப் போகிறது. யாரும் உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுந்திருக்கவில்லை. சப்இன்ஸ்பெக்டரும் தன் ஜம் பம் பலிக்காதது கண்டு திரும்பிப் போய்விட்டார். சப் இன்ஸ்பெக்டரின் நடத்தையைக் கண்ட கணப திக்கு வீர ஆவேசம் பொங்கிற்று. அந்நடத்தையை பலமாகக் கண்டித்து ஓர் கண்டனத் தீர்மானமும் அங்கு நிறைவேற்றப்பட்டது. அன்று முதல் அவ் வூர் ஹரிஜனங்கள் கணபதிக்கு அன்பும் ஆதரவும் செலுத்தத் தொடங்கினர்.

இவ்வாறு சுமார் ஓராண்டு வரை மிகவும் தீவிர மாக, தலைவர்கள் அனைவரும் ஆச்சரியப்படும்படி தீண் டாமைப் பேயை விரட்டினர்.

## இரண்டணு பணமுடிப்பு

1934 ஜனவரி 27உ காந்தியடிகள் ஹரிஜன நிதி யும், பூகம்ப நிதியும் வசூலிக்க வந்திறங்கினர். அன்று மாலையில் காப்தி சதுக்கத்தில் வரவேற்கப்பட்டதும் பல ஸ்தாபனங்களிலிருந்தும் உபசாரப் பத்திரங்களும் பண முடிபுகளும் அடிகளுக்கு அளிக்கப்பட்டன அவ் வமயம் நம் கணபதி அவர்கள் 'யுவ பாரத சங்க' சார் பில் ஓர் விசித்திரமான—ஆனால் ஊன்றிக் கவனிக்கத் தகுந்த பணமுடிப்பு, அளித்தார். 24 பைசாக்களை எழுத்துத் தெரியாதபடி கல்லில் நன்ருகத் தேய்த்து அவைகளை கடிதம் அனுப்பும் கூடுபோல் தைக்கப்பட்ட கதர் கைக்குட்டை ஒன்றில் வைத்துக் கொடுத்தார் மகாத்மாஜி அதை உடைத்துப்பார்க்க செல்லாக்கா சாக 24 பைசாக்கள் இருப்பதைக் கண்டு ஆச்சரிய

முற்றார். கணபதி 'இதுதான் ஏழை இந்தியனது சாரசரி தினசரி வருவாய் என்பதைத் தங்கள் நினைவிற்கொண்டு வரவே இவ்வாறு செய்தேன்' என்று கூறவே, காந்தி கணபதியின் மதிநுட்பத்தைப் பாராட்டி புன்முறுவல் கொண்டார்.

## சவுத் இந்தியன் ஷோ

1935 ஆகஸ்ட் மாதத்தில் 'சவுத் இந்தியன் ஷோ' என்னும் பெயரால் ஓர் கொள்ளைக் கூட்டம் காரைக்குடி மக்களின் ரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருந்தது, அதனால் பல பணக்காரர்கள் ஏழைகளானார்கள். ஏழைகள் பட்டினியை வளர்த்தார்கள். சம்பளத்துக்கு வேலை செய்வோர் வேலையின்றித் தவிக்க நேர்ந்தது. அதனால் ஊருக்குள்ளே நாள்தோறும் திருட்டு கொலை இவைகள் ஏராளமாக வளர்ந்தன. பெண்களது நகைகள் விற்கப்பட்டும், அடவு வைக்கப்பட்டும் தொலைந்தன. ஆனால் மதுக் கடைகளுக்கு ஏராளமான லாபம் கிடைத்தது. தொழிலாளர்கள் ஷோ வலையில் அகப்பட்டுத் தவிக்கலானார்கள். இந்தக் கோரக் காட்சியைக் கண்டு மனம் பொறுதவராய் தோழர் கணபதி விறிட்டு எழுந்தார். எத்தகைய தியாகம் செய்தேனும் இந்த ஷோ அரக்கனையும் அவனைச் சார்ந்தோர்களையும் ஒழித்துவிடக் கங்கணம் கட்டினார்.

ஷோவினால் ஏற்படும் தீமைகளை பொதுஜனங்களுக்கு எடுத்துக்காட்டி பிரசுரங்கள் வெளியிட்டார். பொதுக்கூட்டங்கள் கூட்டி. கண்டித்தார். ஷோ நடத்த அனுமதி தந்த முனிசிபல் கமிஷனருக்

கும் ஷோ முதலாளிகளுக்கு பக்கபலமாக நின்ற போலீசு வர்க்கத்தார்களுக்கும் பகிரங்கக் கடிதங்கள் அச்சிட்டு வழங்கினர். இவைகளுக்கெல்லாம் தகுந்த பலன் கிடைக்கவில்லை. கடைசியாக, இன்னும் இரண்டு வாரத்தில் ஷோவை நிறுத்தாவிடில் அதற்கு அனுமதி கொடுத்த முனிசிபல் கமிஷனரையும், மக்களின் கூற்றுவனகிய ஷோ வையும் பலாத்காரமாக அப்புறப்படுத்த நேருமென்ற இறுதி எச்சரிக்கை கொடுத்தார்.

இந்த எச்சரிக்கை வெளிவந்த அன்று சில போலிஸ் கான்ஸ்டபிள்கள், நண்பர்களுடன் கோயிலூர் ரோட்டில் நின்று பேசிக்கொண்டிருந்த கணபதியை உதைத்தனர். போலீசார் சாதாரண உடையில் இருந்தமையால், அவர்களில் ஒருவரிடமிருந்து தடியைப் பிடுங்கி அவர்களை வெகு தூரம் வரையில் துரத்திவிட்டு திரும்பவும் முதலில் நின்ற இடத்திலேயே வந்து நின்றார். சில நிமிடங்களில் போலீஸ் உடையுடன் பத்துப் பதினைந்து கான்ஸ்டபிள்கள் வந்து தாக்கிப் படுகாயப்படுத்தினர்கள். அன்றி நியூசன்ஸ் சட்டத்தின் கீழ் வழக்கும் தொடர்ந்தனர்.

எதற்கும் அஞ்சாத இவ்வீரன் உடனே மேல் நடபடிக்கை எடுத்துக்கொள்ள ஆரம்பித்தார். ராஜாங்கசபை வரையிலும் இது விஷயமாக பிரச்னையைக் கிளப்பினர். பத்து தினங்களுக்குள்ளாக சர்க்காரிடமிருந்து ஷோ சொந்தக்காரர்களுக்கு அதிமதி ரத்து உத்தரவு கிடைத்தது. முனிசிபல் கமிஷனரும் காரைக்குடி எல்லையைவிட்டு 12-வது நாளே வெளியேறினர். அன்று முதல் காரைக்குடி

யில் சூதாட்டக் கூட்டம் எதுவும் கொள்ளையிட வருவதில்லை.

நியூசன்ஸ் கேஸ் பெஞ்சுக் கோர்ட்டில் நடை பெற்றது. கணபதியும் அவரது நண்பர்களும் சுத்த லாளிகளென எதிர்வாதம் செய்தும் பயனில்லாது போயிற்று. கணபதிக்கு 15 ரூ அபராதமும் மற்றவர் களுக்கு தலைக்கு 5 ரூ அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்தாது காலங்கடத்தி வரவே, ஒரு நாள் போலீசார் கணபதியின் கைக் கடிகாரத்தை ஜப்தி செய்து சென்றனர்.

## வரவேற்புக் கமிட்டியில் இடம்

தமிழ்நாடு காங்கிரஸ் மகாசபையைக் காரைக் குடியில் நடத்துவதற்காக, 1935 நவம்பர் 28-ம் தேதி நடைபெற்ற வரவேற்புக் கமிட்டிக் கூட்டத்தில் N. S, கணபதி, நிர்வாகக் கமிட்டியில் ஒருவராக தேர்ந்தெடுக்கப் பெற்றார். அம் மகாநாட்டின் வெற்றிக்குக் காரணமாக இருந்தவர்களுள் இவரும் ஒருவர் என்று கூறினால் மிகையாகாது.

இவ்வாறு அரசியலிலும், மக்களது நன்மைக் கெதிரான விஷயங்களில் மட்டுமல்ல, ஹிந்தி மொழி வளர்ச்சியிலும்கூட ஆர்வம் காட்டி உழைத்து வந்தார். அதற்காக காரைக்குடி கல்லுக்கட்டி மேல்கரையில் ஒரு கட்டிடத்தின் மாடியில், லஜபதி ஞாபகார்த்த ஹிந்தி நிலயம் ஒன்று டிசம்பர் 9உ யன்று நிறுவினார். அதனை டாக்டர் சுப்ரமண்யம் அவர்கள் திறந்து வைத்தார். அங்கிலயத்தை பொன்னேபோல் போற்றி

வளர்த்து அதன் மூலம் ஏராளமான மாணவர்களுக்கு 'ஹிந்தி' போதித்து, பொதுமொழியைப் பரவச் செய்தார்.

சில தினங்கள் செல்லவே டிசம்பர் 28-ம் நாள் காங்கிரஸ் மகாசபையின் பொன்விழா காரைக்குடியில் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம், சிறைசென்ற சத்தியாக்ரகிகளுக்கு அளிக்கப்பட்ட வெள்ளிப் பதக்கப் பரிசும் இவருக்குக் கிடைத்தது.

## நம்பிக்கையில்லாத் தீர்மானம்

காரைக்குடி நகரசபை உபதலைவர் டாக்டர் சுப்ரமணியம் அவர்கள் மீது நம்பிக்கையில்லை என்று ஒரு தீர்மானம் 1937 எப்ரல் 20ம் தேதி நடந்த கவுன்சில் விசேஷக் கூட்டத்தில் கவுன்சிலர் ஒருவரால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப் பட்டது. கூட்டம் முடிந்து டாக்டர் சுப்ரமண்யம் கவுன்சில் ஹாலை விட்டு வெளி வந்ததும், வெகுநேரம் காத்திருந்த ஏழைகள்-தொழிலாளர்கள் வரிகொடுப்போர்களைக் கொண்ட ஒரு பெருங் கூட்டம் டாக்டரை வாழ்த்தி ஜெயகோஷங்கள் செய்தது. காரில் டாக்டரை ஏற்றி ஊர்வலமாக ஜெயகோஷத்துடன் ஆசுபத்திரிக்கு அழைத்துவந்து, அங்கு நடந்த கூட்டத்தில் முனிசிபல் கவுன்சிலின் நடத்தையைக் கண்டித்து பலர் பேசினார்கள். இப்பெரு முயற்சிக்குக் காரணம் என். எஸ். கணபதியாகும். அடாது செய்கின்ற கூட்டத்தாருக்கு புத்தி புகட்டும் பொருட்டும், உண்மைநிலை தவறாது பொதுஜன சேவை செய்வோர்தான் நாட்டு மக்களின் நம்பிக்

கைக்குப் பாத்திரமாவார்கள் என்ற உண்மையை நிரூபிக்கும் பொருட்டும் இந்நிகழ்ச்சியை ஜனங்களுக்கு நிரூபித்துக் காட்டினர்.

## தோட்டித் தொழிலாளர் சங்கம்

முனிசிபல் தோட்டிகளின் ஒற்றுமைக்கும் நன்மைக்கும் உழைக்கக் கருதி, காரைக்குடி முனிசிபல் தோட்டிகள் அனைவரையும் ஒன்று சேர்த்து, தோட்டித் தொழிலாளர் சங்கம் ஒன்று நிறுவி உழைத்துவரலானர். சங்கம் தொடங்கிய இரண்டொரு மாதத்தில் பயனளிக்கத் தொடங்கியது. அப்பொழுதுதான் முனிசிபல் கவுன்ஸிலும் தோட்டிகளுக்கு மிதியடி தானம் செய்யும் திர்மானத்தை நிறைவேற்றி உதவி புரிந்தது.

வரவரத் தொழிலாளர் நன்மையில் நாட்டம் வளர்ந்தோங்கவே, ஒற்றுமையின்றிப் பிரிந்து வாழ்ந்த மோட்டார் தொழிலாளர் சங்கத்தை ஸ்தாபனம் செய்து அதன் காரியதரிசியாக விருந்து திறம்பட நடத்தி வந்தார். அதனல் மோட்டார் தொழிலாளிகள் லஞ்சப் பேயையும் அடிமைப் பேயையும் விரட்டினர். வேலையின்றித் தவித்த பல மோட்டார் தொழிலாளருக்கு வாழ்க்கை நிரந்தரம் பெற்றது.

## மூன்றுசீட்டு அட்டகாசம்

பொம்மைச்சீட்டுகளை வைத்துக்கொண்டு வழியே செல்லும் ஏழை எளியவர்களை வஞ்சித்து சூதாடி, கொள்ளையடிக்கும் கூட்டத்தார் காரைக்குடியில்

அதிகரிக்கலானார்கள். ஆயிரக்கணக்கான ஏழைகள் மூன்று சீட்டுக்காரர்களின் வலையில் சிக்கி, கைப் பொருளைப் பறிகொடுத்து தவிக்கலானார்கள். அந்தச் சூதாடிகளை ஒழிப்பதற்காக காங்கிரஸ் கமிட்டிகளிலும், பல சங்கங்களிலும் எத்தனையோ முறை தீர்மானங்கள் நிறைவேற்றி நடவடிக்கை எடுத்தும் பலனில்லாது போயிற்று. தன்னந்தனியே எவராவது சென்றால் இக்கூட்டத்தார் அவர்களைத் தொந்தரவு செய்வதும், அடித்துப் பிடுங்குவதும், சகஜமாகிவிட்டன. இக்கொடுமைகளைச் சகியாதவராய் தோழர் கணபதி எவ்வாறாயினும் இவர்களை ஒழித்துவிடுவதெனக் கங்கணம் கட்டினார். மூன்றுசீட்டுக்காரர்களை கண்ட இடத்தில் பிடித்துச்சென்று போலீசாரிடம் ஒப்படைப்பதுண்டு. போலீசாரும் இவ் விஷயத்தில் கவலை செலுத்தாததால், இனிமேல் இப்படிச்செய்வது சரியில்லை எனக்கருதி அவர்களைக் கண்டகண்ட இடத்தில் உதைத்து விரட்டுவார். பொருளைப் பறிகொடுத்தவர்களுக்கு, மூன்றுசீட்டுக்காரர்களிடமிருந்து பலாத்காரமாக வாங்கிக்கொடுத்து உதவிவரலானார். இதனால் மூன்றுசீட்டுக்காரர்களின் அட்டகாசம் சிறிது குறைபலாயிற்று. அதனால் அக் கொள்ளைக் கூட்டத்தார், இவர்மீது வெறுப்பும், பயமும் கொண்டனர்.

ஒருநாள் 17—6—40 திங்கட்கிழமையன்று சந்தை நாளாகையால், மூன்று சீட்டுக்காரர்களின் தொல்லைகளை ஒழித்து சந்தைக்குச் செல்லும் ஏழைகளைக் காப்பாற்றுதற்கு, நகரின் பல பாகங்களிலும் சுற்றி வந்தார். காந்தி சதுக்கத்தின் பக்கத்தில் வந்துகொண்டிருக்கும்போது, வயது சென்ற கணவன் மனைவி இருவர் அழுதுகொண்டு எதிரே வருவதைக்

கண்டு மனமிளகியவராய் அவர்களைக் காரணம் விசாரிக்க, வறுமையின் கொடுமையால் தாலியை விற்று அதனால் கிடைத்த ரூபாயையும் மூன்று சீட்டுக்காரர்கள் பிடுங்கிக் கொண்டனரெனத் தெரியவந்தது. உடனே அவர்களை அழைத்துச்சென்று, மூன்று சீட்டுக்காரர்களிடமிருந்து பலாத்காரமாக பணத்தைப் பிடுங்கிக் கொடுத்தார். அப்பொழுது அந்த சூதாட்டத்தலைவன் பயில்வான் என்பவன், கணபதி திரும்பும் போது "பார்த்துக்கொள்ளுகிறேன் உன்னை" என்று முணுமுணுத்துக்கொண்டே ஓடி மறைந்தான்.

மூன்றும் நாள் (19—6—40) புதன்கிழமை இரவு 8 மணிக்கு கல்லுக்கட்டி வடகரையில், நாஷனல் ஸ்டோர்ஸில் திருப்பத்தூர் தாலுகா காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசி ஸ்ரீ T. R. குருசாமி B. A. அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். கூட இன்னும் இரண்டொருவர் பேசிக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் இரண்டு தினங்களுக்கு முன்னால் உதைவாங்கிய மூன்று சீட்டுக்கார பயில்வானும் நஞ்சுலாலும் திடீரென கடைக்குள் பிரவேசித்தனர். நஞ்சுலால் என்பவன், உட்கார்ந்திருந்த தோழர் கணபதியை ஓர் பிச்சுவாகொண்டு நெஞ்சில் குத்தினான். எதிர்பாராது நடந்த இந்த பயங்கரக் காட்சியைத் தடைசெய்ய ஸ்டோர்ஸ் சொந்தக்காரர் ஸ்ரீ N. S. கோபால அய்யங்காரும், ஸ்ரீ T. R. குருசாமியும் சாமியாரும் முயன்றனர். குத்துண்ட கணபதியும் பத்து நிமிஷம் வரை எவ்வித சத்தமும் கொடுக்காமல் நஞ்சுலாலுடன் போராடினார். ஆனால் பலன் எதுவுமில்லாது போயிற்று. பயில்வான் என்பவன் காலைத் தட்டிவிட கணபதி கீழே விழுந்தார். விழுந்த பிறகும்

குத்துவது நிற்கவில்லை. முதல் குத்திலேயே கணபதியின் ஹிருதயம் கிழிந்துவிட்டதாகையால், சக்தியிழந்துவிட்டார். இதற்குள் பெருங்கூட்டம் அங்கு கூடிவிட்டது. எவரும் கொலையாளியைப் பிடிக்கத் துணியவில்லை.

அப்பொழுது பீட் கான்ஸ்டபிள் (P.C. No. 814 திருமலைச்சாமிக் கோனர் என்பவர் ஓடிவந்து நஞ்சுலாலை பின்புறமாகப் பிடித்துக்கட்டி போலிஸ் ஸ்டேஷனுக்கு கொண்டுபோனர். கூடியிருந்த ஜனங்கள் படுகாயமுற்ற கணபதியை முனிசிபல் ஆசுபத்திரிக்குத் தூக்கிச் சென்றனர். ஊரிலுள்ள எல்லா டாக்டர்களும் தங்களாலானவரை சிகிச்சை செய்தும் பலனில்லாது போயிற்று. ஒரு சில நிமிஷத்தில் உயிர் நீத்தார். இக்கோரக் காட்சியைக் கண்ட மக்களனைவரும் கண்ணீர் வடித்தனர்.

மறுநாள் காலையில் பிரேத சோதனையிட்ட பின்னர், காங்கிரஸ்காரர்களிடம் கணபதியின் உடல் கொடுக்கப்பட்டது. பிணத்தைக் காங்கிரஸ் மாளிகையில் கொண்டு வந்து, நன்கு அலங்கரிக்கப்பட்டு, பல ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் பின் தொடர மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இடையே கருப்புக் கொடியுடன் ஓர் பிர்மாண்டமான மௌன ஊர்வலமும் நடைபெற்றது. வெளியூர்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான நண்பர்கள் அதில் கலந்து கொண்டனர். நகரமெங்கும் பாட்டாளிகள் —ஏழைகள்-பணக்காரர்கள் எல்லோரும் கணபதியின் பிரிவுக்கு ஆற்றாதவர்களாய் வாடிய முகத்துடன் காணப்பட்டனர்.

## சில குறிப்புகள்

கையில் பொருளில்லாவிடினும் எப்பொழுதும் சலவை செய்த ஆடைதான் கட்டுவது வழக்கம். சிகப்பு உடையணிவதில் அவருக்கு அதிகப் பிரியம். தன்னுடன் எத்தனைபேர் சென்றாலும் அவர்களுக்குச் செலவு செய்ய அஞ்சுவதில்லை. எவ்வளவு பெரிய காரியமாக விருந்தாலும் மிக எளிதில் அவைகளை முடிக்கும் ஆற்றலுண்டு. ஆண்டி முதல் அரசன்வரை யாரையும் ஒன்றாகவே மதிப்பார். ஆனால் ஏழைகள் கண்ணீர் சிந்துவதையும் பாட்டாளிகள் கொடுமைப் படுத்தப்படுவதையும் கண்ணால் காண சகித்திருக்க டார். தன்னுயிரைக் கொடுத்தேனும் அவர்களைக் காப்பாற்ற முந்துவார். இவரது வாழ்க்கையில், வெறும் அரசியல் வாதியாக மட்டுமிராமல் மூட நம்பிக்கை மூடப் பழக்கவழக்கம் இவைகளை ஒழிப்ப திலும், எடுத்தகாரியம் யாவினும் புரட்சிக்காரனு நடந்து கொள்ளுவார். ஒவ்வொன்றுக்கும் எத் தனையோ எடுத்துக்காட்டுகள் கூறமுடியும். குடுகுடுப் பைக்காரன்—மந்திரவாதி இவர்களுடன் போரிட்ட வரலாறுகளும், மகர்நோன்புப் பொட்டலில் மண்டை யுடைந்த விஷயமும் புரட்சி எழுச்சியை மக்களிடை உணர்த்தும் சம்பவங்களாகும்.

இத்தனை காலமும் இவ்வளவு ஊழியங்கள் புரிய செலவுக்கு என்னசெய்தார்? என்றகேள்விபிறக்கலாம். தனக்காக எதுவும் செய்யாத காரணத்தால், மனமு வந்து பலர் உதவி வந்தனர். டாக்டர் சுப்ரமண்யம் அவர்களிடம் ஆயிரக்கணக்காக பொருளுதவி பெற்று ஆக்க வேலைகள் செய்து வந்தார் என்பது கவனிக்கத்

தக்கதாகும். பலாத்காரமாகவும் ஒரு சிலரிடம் பணம் பெற்றுள்ளார். எனினும் அவை யாவும் பொதுநன் மைக்காகவேதான் செலவிட்டார் என்பதை எல்லோ ரும் நன்கு தெரிந்துள்ளார்கள் என்பதிலய்யமில்லை. சூதாட்ட விஷயமாக அன்று செய்த அவரது தியா கம், இன்று பெரும் பயனளிக்கத் தொடங்கி இருக் கிறதெனின் மிகையாகாது. அன்றிருந்த போலீ சாரைப் போலில்லாமல், இப்பொழுதுள்ள போலிஸ் சர்க்கிளும் சப் இன்ஸ்பெக்டரும் ஷோ - சூதாட்டம் போன்ற கொடுஞ் செயல்களை அறவேயொழிக்க முற்பட்டிருப்பதுகண்டு நகரவாசிகள் பாராட்டக் கட மைப்பட்டிருக்கின்றனர்.

காரைக்குடியைச் சுற்றி எங்கேனும் சனாதனி களோ அன்றி சங்கராச்சாரியாரோ தீண்டாமைக்கு ஆதாரம் தேட முற்பட்டால், அங்கெல்லாம் தோழர் கணபதி சாஸ்திரசம்பந்தமான கேள்விகளை எழுப்பாம லிரார். கேள்விகளுக்குப் பதிலிறுக்க முடியாமல் அவர்கள் பலமுறை வெட்கித் தலைகுனிந்ததுமுண்டு.

உயிர் துறப்பதற்கு முன் 6 மாதங்களாக, உலகத் தின் பல பாகங்களிலுள்ள பெரும் தலைவர்கள் உல குக்குத் தந்த அறிவு நூல்களை, தமிழில் மொழிபெயர்க் கும் பணியில் தீவிரமாகப் பங்கெடுக்கத் தொடங்கினர். அப்படி மொழிபெயர்த்த நூல்களுள் பண்டித ஜவஹர் எழுதிய "கிளிம்ஸஸ் ஆப் தி ஒரல்டு"ம் ஒன்று. இந் நூல் யாரிடம் இப்பொழுது இருக்கிறது என்பது தெரியவில்லை.

வாழ்க்கையின் கடைசி அத்தியாயத்தில் இரு சொன்மாரிகள் மிக முக்கியமானவை.

1. 1940-ம் ஆண்டு தேசீய வாரத்தின்போது பள்ளத்தூரில் நடைபெற்ற மாபெருங் கூட்டத்தில் 5-மணிநேரம், ஒரு நிமிடங்கூட ஓய்வு ஒழிவு இன்றி, ஒரு டசன் சோடாவைப் பருகிக்கொண்டே வருகின்ற தொழிலாளர் ஆட்சியும் இன்றைய முதலாளி பணக்காரர் இவர்களது கொடுமைகளும் என்பதுபற்றி சொன்மாரி பொழிந்தார். இவரது வாழ்க்கையில் அவ்வளவு நேரம் எங்குமே பேசியதில்லை.

2. மதுரையில் சமீபத்தில் ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் வந்திருந்தபோது, சுமார் லட்சம் பேர்வரை கூடியிருந்தனர். ஸ்ரீ போஸின் ஆங்கிலப் பேச்சை நமது கணபதி மிகவும் திறமையாக மொழிபெயர்த்தார். அந்த மொழிபெயர்ப்புப் பிரசங்கத்தை கேட்ட அனைவரும் என்றும் அவரை மறக்க வியலாது.

தனது வாழ்க்கையின் பிற்பகுதியில் காரைக்குடி நகரக் காங்கிரஸ் கமிட்டி, திருப்பத்தூர் தாலூகாக் கமிட்டி, காரைக்குடி ஜில்லாக் கமிட்டி இவைகளில் உறுப்பினராகவிருந்து காங்கிரஸின் நன்மைக்குப் பெரிதும் உழைத்து வந்தார்.

இன்னும் சில நாள் உயிருடனிருந்தால், வருங் கால இந்தியாவில் ஒப்புயர்வற்ற ஒரு தலைவராக விளங்குதற்கு அறிகுறிகளிருந்தன. அந்தப் பெருமை காரைக்குடிக்குக் கிடைக்க, கொடுத்து வைக்கவில்லை என்பதை உணரும் எவரும வருந்தாதிருக்க முடியாது.

# விரைவில் வெளிவரும்.

## எதிர்பாருங்கள்

---

1. தொழிலாளர் தினம்
   [மே தினம்]

2. மாதவன் அல்லது
   மனமற்ற மனம்
   [ஓர் சீர்திருத்த நாடகம்]

---

## நினைவுமலர் வெளிவந்து விட்டன

★

1. நாட்டின் உயிர் நிலை [சிறு ஆராய்ச்சி]
   விலை அணா 4.

2. கர்மவீரன் கணபதி
   [வாழ்க்கைச் சித்திரம்]

ஆசிரியர்,

**N. R. பத்மநாபன்,**

காரைக்குடி.

ஊழியன் காரைக்குடி..